www.tamilarangam.net



தீராந
மாதமிருமுறை, நவம்
பாப்லோ அறிவுக்குயி
பிரான்ஸிஸ் கிருபா
பஷீரின் பாத்துமாவுடை
ஈழத்துத் தமிழ் எதிர்ப
ஒருபாலுறவு
எழுத்தாளர் ராஜாராவ
கிருஷ்ணன் நம்பி கடி
தீர்க்கதரிசி ஜூல் வேர
லக்ஷ்மி மணிவண்ணன
ஜெயமோகன் தொட
நாசய்யா நினைவுத்
இவர்கள் - ந.முத்துசா
அஞ்சலி - சிவபாதசுந்
டைரி
நீல பத்மநாபன் கவை
- புத்தக விமர்சனம்
புதுப் புத்தகம்
கே.சி.முருகேசன் -
கேணி
காதலையும் அன்பை
வெளிப்படுத்தும் ஓவி
தோல்பாவைக் கூத்

சிவபாதசுந்தரம்
(1912-2000)

# இலக்கியத்துடன் பிணைந்த வாழ்வு.

பெ.கோ.சுந்தரராஜன்
(சிட்டி)

1943ம் ஆண்டு மத்தியில் இலங்கை வானொலியின் தமிழ் நிகழ்ச்சி நிர்வாக பொறுப்பில் சிவபாதசுந்தரம் இருந்தபோது, திருச்சியிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த கலாமோகினி இதழைக் குறித்தும் அவ்விதழில் வெளிவந்த என்னுடைய 'அந்திமந்தாரை' என்ற சிறுகதை குறித்தும் ஒரு நீண்ட விமர்சன நிகழ்ச்சியை அமைத்து ஒளிபரப்பினார். அப்பொழுது நான் திருச்சி 'ஆல் இந்திய ரேடியோ'வில் பணியாற்றி வந்தேன். மேல் குறிப்பிட்ட நிகழ்ச்சி ஒளிபரப்பைக் கேட்ட திருச்சி நிலைய இயக்குநராயிருந்த ஜி. டி. சாஸ்திரி என்னிடம் "என்ன, இலங்கை வானொலியில் உன்னைப் பற்றியே பதினைந்து நிமிஷம் பிரசாரம் நடந்தது! எதாவது 'ப்ரைப்' கொடுத்து வைத்திருக்கிறாயா" என்று கேட்டார். என்னைக் குறித்து சிவபாதசுந்தரத்திற்கு இவ்வளவு பாராட்டும், அபிமானமும் இருந்தது எனக்கு அப்பொழுதுதான் தெரியும்.



சிவபாதசுந்தரத்தை ஈழகேசரி இதழின் வழியாகத்தான் நான் அறிந்திருந்தேன். 'ஈழகேசரி' இதழின் ஆசிரியப் பொறுப்பில் அவர் இருந்த தினங்களில் சென்னை வந்து மணிக்கொடி குழுவினரில் கு.ப.ரா, பிச்சமூர்த்தி, புதுமைப்பித்தன் ஆகியோரை சந்தித்துவிட்டு சென்றார். அப்போதே நான் திருச்சி வந்துவிட்டேன். மணிக்கொடி குறித்தும் மணிக்கொடி எழுத்தாளர்கள் குறித்தும் தமிழ் இலக்கியம் குறித்தும் தொடர்ந்து அவர் ஈழகேசரியில் எழுதினார். ஆனால் அப்போது நான், பின்பு எங்களுக்குள் ஒரு நட்பு ஏற்பட்டு 'இலக்கிய இரட்டையர்கள்' என்று சொல்லப்படும் அளவுக்கு அது நீண்டு, சேர்ந்து இயங்கும்விதமாக அமையும் என்று நினைத்திருக்கவில்லை.

1912ம் ஆண்டு இலங்கையில் அவர் பிறந்தார். அவருடைய முன்னோர்கள் இங்கு திருநெல்வேலியில் இருந்து அங்கே சென்றவர்கள். சட்டம் படித்து பட்டம் பெற்றிருந்த போதிலும் சிறுவயதிலிருந்தே இலக்கியம் மட்டும்தான் அவருடைய ஈடுபாடாக இருந்தது. 1945ம் ஆண்டு அவரது முதல் புத்தகம் 'ஒலிபரப்புக் கதை' வெளிவந்தது. இப்புத்தகத்திற்கு இலங்கைத் தமிழ் சங்கப் பரிசு கொடுக்கப்பட்டது. இலங்கை வானொலியில் அவர் வேலை பார்த்த அனுபவத்தின் அடிப்படையில் எழுதப்பட்ட புத்தகம் இது. தமிழில் அந்த வகையில் வந்த முதல் புத்தகம் இதுதான். பின்பு 1948ல் லண்டன் சென்று பிபிசியில் இணைந்து பிபிசி. தமிழோசையை துவங்கினார். இதே ஆண்டு சிவபாதசுந்தரத்தின் இரண்டாவது புத்தகம் 'மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில்' வெளிவந்தது. லண்டனில் பிபிசி வேலையில் தொடர்ந்து ஆறு வருடங்கள் அவர் இருந்தார். பின்பு திரும்பி இலங்கை வந்து விளம்பரத் துறையில் சேர்ந்தார். 1958ல் இங்கு வந்து சென்னையில் செட்டிலாகிவிட்டார். ஸ்கிரீன் பிரிண்டிங் வியாபாரம் தொடங்கினார். இந்த வியாபாரத்தை அவரும் அவரது பையனுமாக சேர்ந்து தொடர்ந்து 1988ல் அவர் மீண்டும் லண்டன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செல்வதுவரை செய்துகொண்டு வந்தார்கள். அவர் சென்னை வந்த பின்புதான் அவருக்கும் எனக்கும் நேரடி தொடர்பு ஏற்பட்டது. இங்கு அடையாறில் காமராஜர் நகரில்தான் தங்கியிருந்தார். தினமும் சாயங்காலம் மூன்று மணிக்கு வந்துவிடுவார். இரவு வரை பேசிக்கொண்டேயிருப்போம்.

1960ம் ஆண்டு மூன்றாவது புத்தகம் 'கௌதமபுத்தர் அடிச்சுவட்டில்' வெளிவந்தது. கௌதம புத்தர் அடிச்சுவட்டில், மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில் ஆகிய இரண்டு புத்தகங்களையும் படித்த மறைந்த அரசியல்வாதி சி. எஸ். சுப்பிரமணியம் பொள்ளாச்சி நா. மகாலிங்கத்திடம் அப்புத்தகங்கள் குறித்து கூறியிருக்கிறார். மகாலிங்கத்திற்கு அந்த புத்தகங்கள் மிகவும் பிடித்துப் போய்விட்டது. மகாலிங்கம் கூப்பிட்டு நாயன்மார்கள் பற்றி எழுதுங்கள் நான் உதவி செய்கிறேன் என்று சொன்னார். இத்திட்டத்திற்காக நானும் சிவபாத சுந்தரமும் இணைந்து நூறுக்கும் மேற்பட்ட, நாயன்மார்கள் சென்ற கோயில்களுக்கு சென்றோம். அவர் ஒரு சிறந்த புகைப்படக் கலைஞர். இந்த பயணத்தின் போது மிகச்சிறந்த புகைப்படங்களை அவர் எடுத்து வைத்திருந்தார். ஆனால் அவர் புகைப்படக் கண்காட்சிகள் எதையும் நடத்தவில்லை.

நாயன்மார்கள் குறித்து விரிவாக ஆராய்ச்சி செய்து ' சேக்கிழார் அடிச்சுவட்டில்' எழுதினார். 1973ம் ஆண்டு இப்புத்தகம்வெளிவந்தது.

அவர் சென்னையிலிருந்த இக்காலங்களில் எங்கள் நட்பு பலப்பட்டு தமிழ் நாவல் மற்றும் சிறுகதைகள் குறித்த வரலாறு எழுதும் திட்டம் உருவானது. அனேகமாக அதன்பின்பு கடைசிவரை நாங்கள் இரண்டு பேரும் சேர்ந்தே இயங்கினோம். இலக்கிய கூட்டங்கள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரைகளுக்கு எங்கள் இருவருக்கும் சேர்த்துதான் அழைப்புகள் அனுப்பப்பட்டன. 'சிட்டி சிவபாதசுந்தரம்" என்று ஒரே பெயராகத்தான் குறிப்பிட்டார்கள். 1977ம் ஆண்டு, தமிழ் நாவல் நூறாண்டு வளர்ச்சியும் வரலாறும், வெளிவந்தது. 1989ல் தமிழ் சிறுகதை வளர்ச்சியும் வரலாறும் வெளிவந்தது. பிந்தைய புத்தகத்தை க்ரியா ராமகிருஷ்ணன் மிகச் சிறப்பாக அச்சிட்டு கொண்டுவந்தார். புத்தகத்தை பார்த்த பின்பு புத்தகம் வெளிவந்த விதத்தில் சிவபாதசுந்தரத்திற்கு மிகவும் சந்தோஷம்.

இடையில் 1969ல் பாரதிய வித்யா பவன் இதழியல் துறை வருகை தரு. பேராசிரியராக எங்களை அழைத்தது. உடல்நிலை காரணமாக என்னால் போக முடியவில்லை. அவர் சென்று ஐந்து வருடங்கள் பாரதிய வித்யா பவனில் இருந்தார். பின்பு மீண்டும் சென்னை வந்தார். தமிழக அரசியல் தலைவர்களான அண்ணா மறைந்த போதும் காமராஜர் மறைந்த போதும் சென்னை வானொலியில் நேரடி வர்ணனை சொன்னவர் சிவபாதசுந்தரம்தான். 1984ம் ஆண்டு மணிக்கொடி பொன்விழாவை அவர்தான் முன்னின்று நடத்தினார்.

1988ம் ஆண்டு லண்டனில் மருத்துவராக இருக்கும் அவருடைய பையன் அவரை லண்டனுக்கு அழைத்துச் சென்றான். அப்பொழுது அவரது வாழ்நாள் புத்தக சேகரிப்பான 3000 புத்தகங்களையும் மறைமலையடிகள் நூல் நிலையத்திற்கு அன்பளிப்பாக கொடுத்துவிட்டு சென்றார். மறைமலையடிகள் நூலகத்தைத்தான் அவர் சென்னையில் இருந்தது வரைக்கும் அவருடைய ஆராய்ச்சி திட்டங்களுக்காக உபயோகப்படுத்தி வந்தார். லண்டன் சென்ற பின்பும் அங்கிருந்து கட்டுரைகள் தொடர்ந்து எழுதினார். அவர் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரைகள் தொடர்ந்து இந்தியன் எக்ஸ்பிரஸில் வெளிவந்தது. அங்கு அவர் வித்துவான் சேஷையங்காரின் ஆதியூர் அவதானி சரித்திரத்தை பிரிட்டீஷ் மியூசியத்தில் கண்டு பிடித்தார். தமிழில் வெளிவந்த முதல் நாவல் அது. 1875ம் ஆண்டு அதன் முதல் பதிப்பு வெளிவந்திருந்தது. நானும் அவரும் இணைந்து அப்புத்தகத்தை எடிட்செய்து பதிப்பித்தோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்னைவிட இரண்டு வயது சிறியவரான அவர் எப்பொழுதும் மிகவும் கண்டிப்பாக இருப்பார். தீவிரமான மனநிலையுடன் எப்பொழுதும் படிப்பதற்கான தாகத்துடன் இருக்கும் ஒருவராகத்தான் அவர் குறித்த பிம்பம் என் மனதில் பதிந்திருகிறது. நிறைய பயணம் செய்வார். 88 வயதிலும் திடகாத்திரமாக நல்ல உடல் நலத்துடன் அவர் இருந்தார். தலைகூட இன்னும் நரைக்கவில்லை. ஆனால் கடந்த ஒரு வருடமாக 'பார்க்கின்ஸன்ஸ் டீஸீஸிஸ்' என்கிற நோய் அவருக்கு இருந்து வந்தது. இந்த நோய் வளர்ந்து கொண்டே வந்து கடைசியில் 8ம் தேதி அன்று அவர் உயிரை குடித்தும்விட்டது.

சந்திப்பு: தளவாய்

TOP

Copyright © Kumudam Publications Pvt.Ltd.
All rights reserved.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்